1973 சனவரி 24]

திருவேடகத்தில் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை

*19 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா--

பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை அமைக்க மதுரை மாவட்டத்திலுள்ள திருவேடகத்தில் இடம் பார்க்கப்பட்டுள்ளது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுரை மாவட்டத்தில் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. போதுமான அளவு நீர்வசதியும் மின்சக்தியும் கிடைத்தால், மூலப்பொருள்கள் கிடைக்குமிடங்களுக்கும் உற்பத்திப் பொருளைப் பயன்படுத்தும் இடங்களுக்கும் அண்மையிலிருத்தல் மற்றும் இன்றியமையாத அடிப்படை வசதிகளும் போதுமான அளவில் போக்குவரத்து வசதிகளும் இருத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மதுரை மாவட்டத்தில் தகுந்த இடம் ஒன்று தொழிற்சாலை அமைப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்படும்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, அந்த பொட்டாசியம் குளோரேட் தொழிற்சாலைக்கு மதிப்பீடு எவ்வளவு? எந்த இடத்தில் அதைத் துவக்குவதாக அரசு உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுமார் 60 இலட்சம் அதற்கு ஆகும். மதுரைக்கும் மேலூருக்கும் இடையில் ஒத்தக்கடையிலே ஆரம்பிக்கலாம் என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

பஸ் டயர்கள் உற்பத்தி

*20 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பஸ் டயர்கள் செய்யும் புதிய தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அப்படி அமைக்கப்படும் தொழிற்சாலை எந்த இடத்திலே எவ்வளவு மூலதனத்தோடு அமைக்கப்படும்? அப்படி அமைக்கப்பட்டபிறகு இப்பொழுது இருப்பதுபோல் வெளிமார்க்கெட்டிலே அதிக விலைகொடுத்து டயர்கள் வாங்கக்கூடிய நிலை மாற்றி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் தொழிற்சாலையிலே விரைவில்
உற்பத்தி செய்ய நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுக்கிறது. ஆனால்,
அனுமதித்ததற்குப் பிறகு இதற்கு டெக்னிகல் கொலாபரேஷன் வேண்டுமென்று
கேட்டபொழுது, பிற நாடுகளிலே அதை பெற்றுத்தர வேண்டும் மத்திய
அரசாங்கம் இதிலே வெளிநாட்டுச் செலாவணி இருப்பதால் மத்திய அரசாங்கம்
நயக்கம் காட்டுகிறது. இதுபோன்ற அனுமதியைப் பல மாநிலங்களுக்கு
மத்திய அரசாங்கம் கொடுத்து இருக்கிறது. எல்லாத் தொழிற்சாலைகளுக்கும்
சேர்த்து 'டெக்னிக்கல் கொலாபரேஷன்' வெளிநாட்டிலிருந்து மத்திய
அரசாங்கம் பெற்றுத் தரலாமா என்ற ஆராய்ச்சியை மத்திய அரசாங்கம் இப்
பொழுது நடத்தி வருகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லா விலே இந்தத் தமிழ் மாநிலத்திலேயே அதிகமாக ரப்பர் விளைகிறது. ஆதலால் அந்தத் தொழிற்சாலையை அந்த ஜில்லாவிலே நிறுவ இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இன்னொரு தொழிற்சாலை அப்படி வருமானால் அதைப் பரிசீலனை செய்யலாம். இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் மலேஷியா நாட்டிலிருந்து ஒருவர் சுமார் 75 இலட்சம் ரூபாய் அளவில் கொண்டு வந்து தொடங்கலாம் என்று இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தைக்கொண்டு அதையும் தொடங்கலாம் என்று முயற்சி யெடுத்திருக்கிறார்கள். அதற்கு நம் அரசு ஆதரவு தந்திருக்கிறது. குமரி மாவட்டத்தில் இன்னொரு தொழிற்சாலையை அமைக்க முடியுமா என்பதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும் பொழுது இந்தத் தொழிற்சாலை அமைய மத்திய அரசாங்கம் தாமதமாக்குவது தான் காரணம் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது நம்முடைய நாட்டிலே பஸ் போக்குவரத்தை நாம் தேசியமயமாக்கி வருகிறோம். இந்த பஸ் போக்குவரத்திற்குத் தேவையான டயர்கள் நல்ல முறையிலேயும், விலை மலிவாகவும் கிடைக்க நமக்கு இந்த டயர் தொழிற்சாலை அத்தியாவசியமான ஒன்றாக இருக்கும் காரணத்தினால், மத்திய அரசாங்கத்தை உடனடியாக வற்புறுத்தி, இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த நம்முடைய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ? அத்துடன் மத்திய அரசாங்கம் சீக்கிரம் இதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளாவிட்டால், நம்முடைய அரசே இந்தத் தொழிற்சாலையை, டன்லப் போன்ற நிறுவனங்களோடு கூட்டு சேர்ந்து ஆரம் பிக்க முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டிலே ஓடும் பஸ்களை நாமே எடுத்து நடத்த மத்திய அரசாங்கத்தால்தான் அனுமதி தரப்படுகிறது. அந்த அனுமதியைப் பெற்றுத்தான் இப்பொழுது தேசியமயமாக்கினோம். அந்தச் சட்டத்திற்கு அனுமதி வாங்குவதற்குள் நாங்கள் பட்டபாடு பெரும் பாடு. இப்பொழுது இந்தத் தொழிற்சாலை. தொழிற்சாலைக்கு அனுமதிக் கிடைப் பதற்குப் பல ஆண்டுக்காலம் ஆகலாம். அனுமதி கிடைத்தபிறகு அதற்கு 'டெக்னிக்கல் நோ ஹௌ' பெறுவதிலே காலதாமதம். மத்திய அரசாங்கம் இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் எந்த அளவிற்கு அக்கறை காட்டுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

கண்ணாடி புட்டிகள் உற்பத்தி

* 21 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கண்ணாடிப்புட்டிகள் (glass bottles தயாரி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளனவா ?

(இ) இல்லையெனில் அரசு சார்பில் இத்தொழிற்சாலைகள் நிறுவும் உத்தேசமுண்டா ?